

கணிதம் | முயற்சி - பயிற்சி - வெற்றி | **நேரம்:- 01.00 மணி**

01. கூட்டுவோம்.

374 + 362	475 + 382	544 + 392	481 + 264	631 + 186

02. தரப்படும் எண்கனை ஏறுவரிசைப்படுத்துக?

1. 265 , 172 , 202 , 127 .....
2. 92 , 170 , 165 , 213 .....
3. 345 , 273 , 615 , 218 .....
4. 140 , 215 , 188 , 245 .....
5. 282 , 301 , 250 , 160 .....

03. சரியான விடை தருக?

1) இலக்கங்களில் எழுதுக.

பதின்மூவாயிரத்து முந்நூற்று முப்பத்தாறு .....

2) எழுத்துக்களில் எழுதுக.

30 350 .....

3) எண் கோலத்தில் அடுத்து வரும் இரு எண்களையம் எழுதுக.


8855, 8865, 8875, 8885, ... , ...

4) 4, 6, 8 என்னும் எண் அட்டைகளைப் பயன்படுத்தி அமைக்கத்தக்க ஆறு எண்களை ஏறுவரிசையில் ஒழுங்குபடுத்தி வெற்றிடங்களை நிரப்புக.

..... , 486 , ... , ... , 846 , ...

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

4) 1) தரப்பட்டுள்ள உருவில் 0.6 ஐ நிழற்றுக.



2) அதில் நிழற்றப்படாமல் எஞ்சியுள்ள பகுதியைப் பின்னமாக எழுதுக. .....

5) ஒரு தென்னந் தோட்டத்தில் 408 தேங்காய்கள் இருந்தன. அதனை நான்கு குவியல்கள் ஆக்கினால் ஒரு குவியலில் உள்ள தேங்காய்கள் எத்தனை?

.....

6) ஆறு சிறுவர்கள் தம்மிடமுள்ள பணத்தைச் சமமாக இட்டு ஒன்று ரூபா 30 வீதம் 6 கேக்துண்டங்களையும், ஒன்று ரூபா 42 வீதம் 6 குளிர்பானப்போத்தல்களையும், ஒன்று ரூபா 25 வீதம் 12 கிழங்கு ரொட்டிகளையும் வாங்கித் தமக்கிடையில் சமமாகப் பகிர்ந்து உண்டார்கள்.

1) அவர்கள் செலவிட்ட மொத்தப் பணம் எவ்வளவு?

.....

2) ஒவ்வொருவரும் இட்ட பணம் எவ்வளவு?

.....

3) அனைவருக்கும் கிழங்கு ரொட்டி ஒவ்வொன்று வீதம் வாங்கியிருந்தால் அவர்கள் மீதப்படுத்தியிருக்கக்கூடிய மொத்தப்பணம் எவ்வளவு?

.....

7) பதின் மூன்று என்னும் எண்ணை உரோம இலக்கத்தில் எழுதுக.

.....

8) ஒரு சதுரவடிவ காணியை சுற்றிவர துண்கள் நாட்டுவுதற்கு 32 தூண்கள் தேவை ஒரு பக்கத்திற்கு நாட்டுவதற்கு எத்தனை தூண்கள் தேவை?

.....

9) ஒரு முச்சக்கரவண்டியில் முதல் பத்து கிலோமீற்றர்களுக்கு ரூபாய் 70.00 வீதமும், இரண்டாவது இருபதுகிலோமீற்றர் வரை ரூபாய் 50.00 வீதமும், அதற்கு மேல் செல்லும் ஒவ்வொரு கிலோ மீற்றர்களுக்கும் ரூபாய் 40.00 வீதமும், அறவிடுவார்.

1) அவ்வாகனத்தில் ஒருவர் 25 கிலோமீற்றர்கள் செல்வதற்கு எவ்வளவு பணம் செலுத்த வேண்டும்? .....

2) அவ்வாகனத்தில் அவர் 50 கிலோமீற்றர்கள் சென்றிருந்தால் எவ்வளவு பணம் செலுத்த வேண்டும்? .....

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

10) ஒரு பாடல் நிகழ்ச்சிக்கு வந்து அங்கு 2 மணித்தியாலங்கள் 45 நிமிடங்களைச் செலவிட்ட சசிகரன் அங்கேயிருந்து பி.ப 6.15 இற்குப் புறப்பட்டான்.

1) சசிகரன் பாடல் நிகழ்ச்சிக்கு வந்த நேரம் யாது? .....

2) சசிகரன் புறப்பட்டுச் சென்ற நேரத்தை நியம நேரத்தில் தருக.

.....

11) கலை நிகழ்வு ஒன்றில் தங்கள் நட்பை பலப்படுத்தி கொள்ள 28 கைகள் குலுக்கப்பட்டன. இதில் எத்தனை நண்பர்கள் கைகளைகுலுக்கல்கள் இடம் பெற்றிருக்கும்?

.....

12) ஒரு சதுரமுகியினதும் ஒரு கனவுருவினதும் மேற்பரப்புக்கள் எத்தனை?

.....

13) ஒரு மைதானத்தை சுற்றி சிவப்பு சிவப்பு , பச்சை பச்சை , மஞ்சள் மஞ்சள் கொடிகள் என்ற அடிப்படையில் 222 கொடிகள் பறக்க விடப்பட்டன. எனில் இதில் எத்தனை பச்சை கொடிகள் பறக்க விட்டப்பட்டன.

.....

14) 4 மீற்றர் 700 சென்றி மீற்றர் நீளமான கயிற்றை 300 சென்றி மீற்றர் நீளமுள்ள துண்டங்களாக வெட்டப்பட்டது.


1) எத்தனை துண்டுகள் கிடைக்கப் பெற்றன?

.....

2) மீதமான துண்டின் நீளம் யாது?

.....

15) பொருட்களின் விலைகளைக் கொண்டு வினாக்களுக்கு விடைதருக?



1) பென்சிலினதும் பேனையினதும் விலையாது?

.....

2) பசைப் போத்தலை வாங்க தேவையான பணத்தை குற்றிநாணயங்களாக வரைந்து காட்டுக?

16) 8 m 45 cm நீளமுள்ள ரிப்பன் நாடா ஒன்று உள்ளது. அதிலிருந்து,

1) 2 m 20 cm நீளமான பகுதியொன்று வெட்டி எடுக்கப்பட்டால் மீதிப் பகுதியின் நீளம் யாது?

.....

2) 5 m 75 cm நீளமான பகுதியொன்று வெட்டி எடுக்கப்பட்டால் மீதிப் பகுதியின் நீளம் யாது?


.....

3) 6 m 60 cm நீளமான பகுதியொன்று வெட்டி எடுக்கப்பட்டால் மீதிப் பகுதியின் நீளம் யாது?


.....

17) நேரங்களை கடிகாரத்தில் குறிக்க?


1. 3.50




2. 6.10




3. 5.35



4. 8.55



5. 3.40



18) ரூபாய் 30.00 பெறுமதியான 5 பேனைகளும் 15.00 பெறுமதியான 3 பென்சில்கள் வாங்குவதற்கு தேவையான பணம் எவ்வளவு ?

.....

19) 9 மனிதர் 5 நாட்களில் செய்யும் வேலையை 3 மனிதர் எத்தனை நாட்களில் செய்து முடிப்பர்?

.....

20) அண்ணன் 16 கிலோக்கிராம் 750 கிராம் உடையவர் , தம்பி 9 கிலோக்கிராம் 900 கிராம் எனின் வித்தியாசம் எவ்வளவு?

.....

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---